1981 மே 12]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால்பண்ணையை, பம்பாயிலுள்ள ஆர்ரே பண்ணை மாதிரிப் பெரிதாக்க வேண்டுமென்றுதான் ஆரம்பக் காலத்திலே துவக்கப்பட்டது. இப்போழுது சமபத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களோடு அங்கே போய் பார்த்தோம். அங்கே நல்ல வசதிகளோடு அதிகமான பால் கறக்கும் தரமுள்ள பசுக் களை வளர்த்து வருகிறார்கள். ஆகவே, தனிப்பட்ட உரிமை தாரர்கள் வரவில்லை என்றாலும்கூட அரசே நம்முடைய கால் நடைத் துறையின் மூலமாக அங்கேயுள்ள வசதிகளையும் மற்ற வைகளையும் பயன்படுத்தி அதிகமான கறவை மாடுகளை வாங்கி வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பம்பாயிலுள்ள பால்பண்ணையைப் போல இங்கே பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்பண்ணையைக் கால்நடைப் பராமரிப்புத் துறை பொறுப்பு ஏற்கும்போது 18 உரிமைதாரர்களும் 12 பட்டதாரி உரிமைதாரர்களும் இருந் தனர். புதிய உரிமைதாரர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் கூடாது என்று தடை இருந்ததினால் உரிமைதாரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. சில உரிமைதாரர்கள் தங்களது உரிமத்தை ரத்து செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். தற்போது 14 உரிமைதாரர்கள் உள்ளனர். பொறுப்பேற்றபின் 5 பட்டதாரி உரிமைதாரர்கள் கால்நடைகளைச் சரிவர பராமரிக்காமல் இருந்ததினாலும் பண உதவி செய்த வங்கிகளுக்குச் சரிவர தொகையினைக் கட்டாததினாலும் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. தற்போது 7 பட்டதாரி உரிமைதாரர்கள் உள்ளனர். ஆகவே அவர்களுடைய கால்நடைகளைச் சரியான முறையில் பராமரிக்காத காரணத்தால்தான் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்பட்டது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை

* (வினா எண். 1019) திரு என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை நட்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூர், டாப்கோ குஞ்சு பொரிக்கும் நிலயம் லாபத்தில் இயங்குகிறது. 1,4.80 முதல் 31-1-81 முடிய ரூ. 32,000- லாபம் ஈட்டியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள கட்பலூரில் இருக்கின்ற கோழிப்பண்ணை நீண்ட நாட்களாக நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த காரணத்தாலே தான் இப்படிக் கேள்வி கேட்கப்பட்டது. இப்பொழுது இலாபத்தில் இயங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள், மெத்த மகிழ்ச்சி. இந்தக் குஞ்சு பொறிக்கும் நிலையத்தை இந்தப் பண்ணையை மேலும் விரிவாக்குவதற்காக அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய இருக்கிறதா? இந்த நிலையத்திலிருந்து கோழி இறைச்சி மலிவான விலையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது: அது இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் மீண்டும் துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குஞ்சு பொறிக்கும் வீரியத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. அடுத்து, இந்த இறச்சியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்குத் தெரிந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழி இறைச்சி விற்பனை என்பது நீண்ட நாட்களாக செய்யப்பட்டு வந்தது; ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குஞ்சு பொறிக்கும் நிலையத்தைப் பொறுத்தவரையிலும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த விவரத்தை சொல்ல முடியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை. விவரம் தெரிந்தவுடன் நான் கூறுகிறேன்.

*சின்னசேலத்தில் கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம்

குறுகிய கால வினா எண். 16—திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலத்தில் கட்டப்பட்டு வரும் பால் குளிரூட்டும் நிலையம் எப்பொழுது துவங்கப்படும்?

ஆ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி;

(அ) சின்ன சேலத்தில் தற்பொழுது கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையத்தில் கட்டுமானப் பணிகளும் இயந்திரங்கள் நிறுவுதலும் முடிவடைந்து, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இக்குளிரூட்டும் நிலையம் விரைவில் முழு அளவில் இயங்க ஆரம்பிக்கும்.